# அகத்தியர்

# இரண நூல்

12




ஆயுஷ் புதுதில்லி நிறுவன நிதியுதவியுடன்
பதிப்பிக்கப்பெற்றது

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
சென்னை - 106.

2007

# அகத்தியர் இரண நூல்

(12)

அருஞ்சொற்பொருள் :

**டாக்டர் வி. விசுவநாதன்,** எல்.ஐ.எம்., சிறப்பு அலுவலர்
சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

ஆயுஷ் புதுதில்லி நிறுவன நிதியுதவியுடன்
பதிப்பிக்கப்பெற்றது

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை
சென்னை - 106.

2007

**நூலடைவு**

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அகத்தியர் இரணநூல் |
| நூலாசிரியர் | : | அகத்தியர் |
| வெளியீடு | : | இந்திய மருத்துவம் – ஓமியோபதித் துறை<br>சென்னை–106. |
| நிதியுதவி | : | ஆயுஷ் நிறுவனம், புதுதில்லி |
| பதிப்பு | : | முதற்பதிப்பு, 1975<br>இரண்டாம் பதிப்பு, 2007 |
| நூல் வடிவம் | : | 1 / 8 |
| அச்சுத்தாள் | : | 18.6 மேப்லித்தோ |
| அட்டைக்கட்டுமானம் | : | பர்ஃபக்ட் பைண்டிங் |
| எழுத்துகள் | : | 11 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | : | 48 |
| பிரதிகள் | : | 2000 |
| அச்சிட்டோர் | : | **நொவினா ஆஃப்செட் பிரிண்டிங் கோ.,**<br>114, வெங்கட்ரங்கம் பிள்ளை தெரு.<br>ஐஸ் அவுஸ். சென்னை – 600 005.<br>தொலைபேசி : 28446166, 28446891 |

# பதிப்புரை

மூத்த தமிழ் மக்களின் பழங்கலை, அடிப்படை மருத்துவமாக பீடுநடை போட்டு வளர்ந்து தழைத்தோங்கும் மருத்துவம் தமிழ் மருத்துவம் எனும் சித்த மருத்துவம்.

அம்மருத்துவ முறையிலுள்ள பல்வேறு வகையான மருத்துவங்களில் இரண மருத்துவமும் ஒன்றும் இந்த இரண நூல் அகத்தியரால் படைக்கப்பட்டது, எனவே அகத்தியர் இரணநூல் என்றே பெயர்சூட்டப்பெற்று, 1975ஆம் ஆண்டு முதல் முதலில் சுவடியிலிருந்து வெளியிடப்பெற்றதும்.

இந்நூல் இரணங்களை தோன்றுதற்கான காரணங்கள், அந்த இரணங்களில் வகை தொகைகளை ஒவ்வொரு இரணங்களில் குறிகுணங்கள், அந்த இரணங்களுக்கான தீர்வு முறைகள் அகப்புற மருத்துவங்கள் போன்றன விளக்கபட்டுள்ளது.

இதில் 103 பாடல்கள் உள்ளன, பாடல்கள் அந்தாதி முறையில் அமைக்கப்பட்டுள்ளன, இடையே பல பாடல்களில் அந்தாதி அமைப்பைக் காணமுடிய வில்லை. ஓலைச் சுவடியிலேயே தேவையானதாகக் கருதியவற்றை மட்டும் தொகுத்து எழுதிக் கொண்டோரோ என ஐயப்பட வேண்டியுள்ளது, இந்த இரண நூல் முழுமையான பாடல்களுடன் இல்லை, சுவடியில் தொடர்ச்சியாக என்னிடப்பட்டு எழுதப்பட்டிருந்த 103 பாடல்கள் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளது.

இப்போது உங்கள் கரங்களை அலங்கரிக்கும் இச்சிறு நூல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகிறது. நடுவலி அரசினை ஆயுள் நிறுவன நிதியுதவியுடன் வெளியிடப்படுகிறது.

நூலில் பிற்பகுதியில் இரணங்களைத் தீர்க்கவல்ல உயர்ந்த மருந்துகளும், அகப்புற மருத்துவ முறைகளும் மருத்துவ மாணாக்கர்கட்கும், மருத்துவர்கட்கும், சித்த மருத்து ஆர்வலர்கட்கும் நல்ல பயனளிக்கும்.

இந்நூலை அச்சிட நிதியுதவி வழங்கிய புதுதில்லி ஆயுள் நிறுவனத்திற்கும் நல்ல முறையில் உரியகாலத்தில் அச்சிட்ளத்த நொவினோ அச்சகத்தார்க்கும், அச்சுப்படி சரிப்பார்த்தளித்த தமிழ்ப்புலவர்கள், சுவடி நகலெடுப்போர் யாவர்க்கும் எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவண்

திட்ட அலுவலர் ஆய்வு மருத்துவர்
அலுவலர்.

## முதற்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி, தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பஃரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவமுறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின்-நிலநடுக்கம், கடற்கோள் போன்ற-சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக எஞ்சியவைகளில், சில மேலை நாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டுக் கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக்காலத்தில் சித்த, ஆயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கே வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில், வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக் கட்சிச் சாப்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பனகல் அரசர், 1924இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்துப் பல கிராம மருத்துவமனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினார். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டப்படி கற்பிக்கப் போதிய பாடப் புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாடப் புத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம், மருத்துவச் சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க.ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசுவழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்ற நூல்கலைப் பார்வையிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம.ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950இல் சித்தமருத்துவம், மருத்துவாங்கச் சருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங் கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூடப் பாடநூல்களும்

துணை நூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும், கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப் பின்விற்பனைக்குக் கிட்டாத புத்தங்கங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (Pharmacopiea Committee 1966, G.O.MS.1263, Dt. 23-8-60), ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி, மற்றும் பாடநூற் குழு என்று (G.O.Ms.No.1060, Health Dt., 13-6-66) ஒரு குழுவும், திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும், விரைவில் பயன்காண வேண்டி 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு என்னும் ஒரு குழுவை (G.O.MS. No.2571 of 23-10-73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன: சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, தட்டெழுத்துப்படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒரு முறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப்பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப்பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில்

ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத்தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு.பு.மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியையும் கொண்டு, அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் அகத்தியர் இரண நூலும் ஒன்று. இதில் இரணங்களின் உற்பத்திக்கான காரணங்கள், இரணங்களின் வகை, தொகை, குறிகுணங்கள் அவைகளுக்குரிய தீர்வுமுறைகள் - அக, புற மருத்துவங்கள் முதலியன விவரிக்கப்பெற்றுள்ளன.

ஏனைய சித்தர் நூல்கள் போலவே இந்நூலும் அந்தாதித் தொடையாக இயற்றப்பெற்றிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால், பல இடங்களில் அந்தாதித் தொடை விடுபட்டுள்ளது. அது பல செய்யுட்கள் மறைந்து விட்டன வென்று தெரிவிக்கின்றது. தற்போது கிடைத்துள்ள நூலில் பண்டைய வழக்கிலிருந்ததும் தற்போது வழக்கிலிருந்து நழுவியதுமான தமிழ்ச் சொற்களாகிய (இரண நோய்களின் பெயர்கள்) **சிங்கி** *(பா. எண். 10)*, **படாகம்** *(பா. எண்.28)*, **கரண், கரணை** *(பா. எண்.71, 77)* **குள்ளான்** *(பா. எண்.71)*, **தோடகை, தோடை** *(பா.எண்.82, 100)* **குறங்குச்சடை, குறிச்சடை, பனிச்சை,** *(பா. 65, 87)* என்பன காணப்படுகின்றன.

இந்நூல் பறங்கிநோய் 16 (பதினாறுவகை) என்று கூறும். அவைகளுள் எரி பறங்கி முதல் நரம்புப்பறங்கி ஈறாக ஏழுவகைப் பறங்கிகளின் குறிகுணங்களே கிடைத்துள்ளன. அதுபோலவே படாகங்களின் வகையும் குறிகுணங்களும் முற்றிலும் கிடைத்தில. பதினாறு வகைச் சிங்கி நோய் என்று கூறப்பட்டுள்ளது. அவைகளுள் இராசசிங்கி, மேகசிங்கி என்ற இருவகைச் சிங்கிகளின் குறி குணங்களே கிடைத்துள்ளன. கரப்பான் எண்பது வகை என்றும், கிரந்தி நோய்கள் நூற்றுப்பத்து என்றும் இரு பாடல்கள் (பா.எண்.9, 8) தெரிவிக்கின்றன. ஆயினும் அவைகளின் பெயர்கள் குறிகுணங்கள் முதலியன கிடைக்கவில்லை.

இந்நூலின் பிற்பகுதியில் இரணங்களைத் தீர்க்கவல்ல உயர்ந்த மருந்து முறைகள் (அக மருத்துவத்திற்கும் புற மருத்துவத்திற்கும்) கூறப்பெற்றுள்ளன. அவை மருத்துவ மாணவர்களுக்கும், மருத்துவர்களுக்கும் மிக்க உதவியாய் இருக்குமென்பது திண்ணம்.

இந்நூல் முழுமையாகக் கிடைக்கப்பெறின் அடுத்த பதிப்பில் முழுமையாகப் பதிப்பித்து வெளியிடுவோம் என்பது உறுதி.

இந்நூலை இயற்றியவர் அகத்தியர் என்பது நூலின் பெயரிலிருந்தே தெரிந்து கொள்ளக்கூடும். அகத்தியர் என்னும் சித்தரைப் பற்றிக் கூறப்புகின் உலகோர்க்குச் சூரியனைக் கைவிளக்குக் கொண்டு காட்டுவதற்கு ஒப்பாகும். ஆகையால், அவர் சரித்திரத்தை இங்கு எழுதாமல் விடுத்துள்ளோம்.

இந்நூல், மலையப்பசாமி வைத்திய சாலையின் உரிமையாளர் அவர்களால் நன்கொடையாகக் கொடுக்கப் பெற்ற 201 (இருநூற்று ஒன்று) ஓலைச்சுவடிகளில் ஒன்றாகும். இவ்வரிய நூலைக் கொடுத்துதவிய அன்னாருக்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க.அன்பழகன், எம்.ஏ., அவர்கள் பேரார்வங் கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும், அருள்மிகு பழநி தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்க் குழுத் தலைவர் உயர்திரு பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற டாக்டர் ஜி.டி.நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு.டி.வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனத்துடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர்க் குழுத்தலைவர் உயர்திரு.பு.மனோகரன் அவர்கள், தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்குகொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப் பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குத் தடையின்றி நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர்க் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச்

செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு. வி.எஸ்.தண்டாயுதபாணி. பி.எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்து வரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத்தலைவர், உயர்திரு.கே.எஸ். நரசிம்மன். ஐ.ஏ.எஸ்., அவர்களுக்கும் இக்குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும், பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெறவேண்டிய ஆலோசனைகளும். ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர், டாக்டர்.பு.மு.வேணுகோபால். எச்.பி.ஐ.எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூலுக்கு அருஞ்சொற்பொருள் எழுதியளித்த தனி அலுவலர் டாக்டர் வி.விசுவநாதன், எல்.ஐ.எம்., அவர்களின் உதவியை மனமுவந்து பாராட்டுகிறோம்.

மிக்க பழுதுற்ற நிலையிருந்த ஏட்டிலிருந்து மிக்க முயற்சி செய்து கையெழுத்துப்படி எடுத்துக் கொடுத்த டாக்டர் மு.சௌரி ராசனின் விடாமுயற்சி மிக்க பாராட்டுக்குரியதாகும்.

அடக்க விலையில் அச்சடிக்கும் தாள்கள் சேஷாயி பேப்பர் மில்ஸ் உரிமையாளர்களிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளது.

இந்நூலை குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய ஏல் அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு, இந்நூலில் காணும் குற்றங் கண்டு முனியாது நல்லாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன், எல்.ஐ.எம்., தலைவர்

அருள்மிகு பழநி தண்டாயுபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600 029.

# பொருளடக்கம்

| | | பக்கம் |
|---|---|---|
| பறங்கித் தொகை | .... | 4 |
| எரிசிங்கிக் குணம் | .... | 5 |
| எரி பறங்கி | .... | 5 |
| மேகப்பறங்கிக் குணம் | .... | 5 |
| மோகினிப் பறங்கிக் குணம் | .... | 6 |
| பறங்கிகளுக்குச் செய்யும் விதம் | .... | 6 |
| யோனிச் சூலை | .... | 7 |
| உமையன் சிங்கிக் குணம் | .... | 7 |
| சண்டிப் பறங்கிக் குணம் | .... | 7 |
| சண்டிப் பறங்கி முதலானதற்கு மருத்துவம் | .... | 8 |
| சிங்கிப் பறங்கிக் குணம் | .... | 8 |
| முலைப்பறங்கிக் குணம் | .... | 9 |
| நரம்புப்பறங்கிக் குணம் | .... | 10 |
| படாகப் பெயர் | .... | 10 |
| மேகப் படாகக் குணம் | .... | 11 |
| அழியாப்படாகம் | .... | 12 |
| சுருக்குப் படாகம் | .... | 12 |
| கல்லுப் படாகம் | .... | 13 |
| கரட்டுப் படாகம் | .... | 13 |
| காரச் சேர்வை | .... | 14 |

| | | |
|---|---|---|
| சிங்கிவகைப் பெயர் | .... | 14 |
| மேகச்சிங்கி | .... | 14 |
| இராச சிங்கி | .... | 16 |
| சிங்கிவகைக்கு மருந்து | .... | 17 |
| இரணங்களுக்குக் குழம்பு | .... | 17, 18 |
| பிளவை இரணங்களுக்கு எண்ணெய் | .... | 19 |
| ஆணிகளுக்கும் மூலமுளை பவுத்திரத்திற்கும் காரம் | .... | 19 |
| காரம் | .... | 20 |
| முலாம் | .... | 20 |
| சிலந்தி இரணங்களுக்கு மருந்து | .... | 21 |
| பச்சைச் சேர்வை | .... | 21 |
| மேலெரிவுக்குக் காரம் | .... | 22 |
| வெள்ளைக் காரம் | .... | 22 |
| மஞ்சள் காரம் | .... | 22 |
| பச்சைக் காரம் | .... | 23 |
| குளிர்ந்த வெள்ளைக் காரம் | .... | 23 |
| குளிர்ந்த பச்சைக் காரம் | .... | 23 |
| குளிர்ந்த சிவப்புக் காரம் | .... | 24 |
| சகல புண்களுக்கும் பொடி | .... | 24 |
| இரணத்திற்குக் கறுப்புச் சீலை | .... | 25 |
| மஞ்சள் சீலை | .... | 25 |

| | | |
|---|---|---|
| சிவப்புச் சீலை | .... | 26 |
| இரணத்திற்கு வெள்ளைச் சீலை | .... | 26 |
| நீலச்சீலை | .... | 27 |
| புரைக்குத் திரி | .... | 27 |
| புரைகளுக்குக் காரத் தண்ணீர் | .... | 27 |
| இரணத்திற்குக் குளிர்ந்த நீலம் | .... | 28 |
| இரணத்திற்குத் தைலம் | .... | 28 |
| பச்சைத் தைலம் | .... | 29 |
| இரணத்திற்குக் குமரித் தைலம் | .... | 29 |
| இரணங்களுக்கு நெய் ( அகமருந்து | .... | 31 |
| மேற்படி நெய் (வேறு) | .... | 32 |
| இரணங்களுக்கு மஞ்சள் காரப்பொடி | .... | 32 |
| குளிர்ந்த நீர் | .... | 33 |
| சகல இரணத்திற்குச் சிங்கித் தைலம் | .... | 33 |

# அகத்தியர் இரண நூல்

அருமறை நான்குஞ் சொன்ன தாய்ந்தறு ரணநூல் தன்னைப்
பருமதி கொன்றை சூடி பாரினில் வாழ்வோர்க் கெல்லாம்
வரியிடை உமையாள் பாகன் வண்மையாய்ச் செய்த உண்மை
வரிவெறுங் கற்றோர் தன்னை வெற்பெனுங் காப்புத் தானே 1

அருஞ்சொற் பொருள் : உறு = தோன்றுகின்ற; பார் = உலகு
வரிஇடை = கோடுபோன்ற (மெல்லிய) இடை

தானின்று தேவிகேட்கத் தயவு டனீசன் சொல்லக்
கானென்ற மனிதர்க் கெல்லாங் கலந்திடும் இரணந் தம்மை
வேனேன்ற விதங்கள் தன்னை வெளிப்பட அறிந்து சொல்வேன்
யானின்று பிறக்கும் ரோகம் வகையினை அறிந்து கொள்ளே 2

(அ.பொ.):- கலந்திடும் = (வந்து) சேரும்; ரோகம் = (வடசொல்) நோய் (இது விரண நோய்களைச் சுட்டும்).

சொல்லிய அறுவை யாலுஞ் சுகமில்லா முழுகை யாலும்
வல்லயப் பொறியி னாலும் மருந்திட்டுக் குணத்தி னாலுங்
கொல்லுயிர் செய்கை யாலுங் கொடும்பகை மோகத் தாலும்
வல்லபால் பகல ருந்தில் வலுரணம் பிறக்கு மென்றார். 3

(அ.பொ):- சொல்லிய அறுவை = பிணி தீர்க்க நூல்களில் கூறப்பட்ட அறுவை முதலிய திர்வுமுறை; சுகமில்லா முழுகை = உடலுக்கு இதம் தராத நீராடல் (அதிக வெப்பமுள்ள நீர், மிகக் குளிர்ந்த நீர், தேங்கிய நீர், பழைய நீர், அசுத்த நீர் போன்றவைகள், மிகுந்த காரமுள்ள சவர்க்காரம், உத்வர்த்தன தூள்கள் முதலியவை உபயோகித்தல் போன்றன). வல்

அயப்பொறி = வலிமை மிகுந்த இரும்பாலான படைகள் அல்லது இரும்பு இயந்திரங்கள்; வல்லபால் = இறுகும்படியாகக் காய்ச்சப்பட்ட பால்

**துஞ்சவே அசுவ நோவுக் கருந்ததி காசைச் செய்து**
**மிஞ்சிய கோயில் பூசை விட்டவர் தமக்கு மாகும்**
**அஞ்சவே வேளை தன்னை மதத்துடன் பரித்த பேர்க்குக்**
**கஞ்சனைப் பிளந்த மாயம் கடுகியே கால னாவார். 4**

(அ.பொ):- துஞ்ச = இறக்க; அசுவ நோவுக்கு - ஆண்மை மிகுந்த விகாரத்தால் கண்ட (கர்தல்) நோயை தூண்டும் படியாக; அருந்த = சிறந்த வாசிகரண மருந்தினை உண்ணவும்; அதிகாசை செய்து = மிகுதியான குற்றங்களைச் செய்து; மிஞ்சிய = வரம்பு கடந்த (மிஞ்சிய அதிகாசை செய்து என மாற்றுக); கோயில் பூசை விட்டவர் = நியமங்களை விட்டவர் (உடலே கோயில் என்பது சித்தர் கொள்கை); அஞ்சு வேளை = (அஞ்சு + ஏ + வேளை) = ஐந்து கணைகளையுடைய மன்மதனை; மதத்துடன் = மிக்க அகங்காரத்துடன்; பரித்த = தாங்கிய (ஆதரித்த) அதாவது வேளின் கணைகளுக்குள் ஆட்பட்டுத் தீய வழியில் ஒழுகின பேர்க்கு; கஞ்சன் = கம்சன்; பிளந்த = இரண்டாக வெட்டிக் கொன்ற; மாயன் = கண்ணன் (காப்புக் கடவுளாகிய திருமால்) காலன் = எமன்.

**காரிகை உமையாள் பாகன் கலந்தினிநரர்க்கு ரோகம்**
**சாரிளை நரக மீந்து சரீரங்கள் ளீயச் செய்யும்**
**வாரிக்கு ளுதித்த கண்டன் வகைபடப் பாவத் தோர்க்கு**
**ஏரிளைப் பாவந் தன்னை இதம்பட ரணமாய்ச் செய்தார். 5**

(அ.பொ):- இளை நரகம் = இழிவான நரகம்; ஈயும் = தரும்; வாரிக்குள் உதித்த கண்டன் = கடலில் தோன்றிய நஞ்சைக் கழுத்தில் தாங்கியவராகிய நீலகண்டர்; ஏர் = பொருத்தமான; இதம்பட = தவிர்க்க இயலாதபடியாகி.

**செய்திட்ட பாவந் தானுஞ் செப்பபெரு ரோக மாச்சு**
**மையிட்ட கண்ணாள் பங்கன் வாகடப் படியே யாக**
**பெய்திட்டப் பேசா நூலின் பெருமையை அறிந்து சொல்வோம்**
**கைதிட்டங் கலந்த ரோகம் கரையினில் அறிந்து சொல்வோம். 6**

(அ.பொ):- பெருரோகம் = குட்டம்; வாகடம் = மருந்து நூல்; கைதிட்டங் கலந்த ரோகம் = கைப் பழக்கத்தில் தீர்வுக்கு வந்துள்ள (விரண) நோய்கள்.

**பிறந்திடும் ரோகந் தன்னில் பேதமேப் பிரித்துப் பேச**
**அறிந்து மேகங்கள் தன்னால் அருரண மிருப தாகும்**
**பொருந்திய வாதந் தன்னால் பொருரண மொன்ப தாகும்**
**மருந்தியல் பித்தம் பத்து வளர்சிலேற்பனம் பன்னிரெண்டே 7**

(அ.பொ):- பேதமே = வகைகளையே; அருரணம் = தீர்ப்பதற்கரிதான விரண நோய்கள்; பொருரணம் = குத்தல், திருகல் முதலியவை தாக்குகின்ற விரணநோய்கள்; வளர் = பெருகுதல், பரவுதல் முதலிய அதிகரிக்குந் தன்மை.

**எண்டிசைக் கிரந்தி நோய் யியல் பத்து நூற தாகும்**
**மண்டிய வகைய றிந்து வயித்தியம் பிரித்துச் சொல்வோம்**
**தண்டமிழ் புகல்வோர் முன்னந் தாமுரை செய்த நூலை**
**வண்டுறை குழலினாளே மதுரம் போலு ரைத்திட் டோமே. 8**

(அ.பொ):- மண்டிய = மிகுதியாகிய; மதுரம் = (இனிமை) அமுதத்துக்கானது.

## கரப்பான் தொகை எண்பது

**எண்பது கரப்பான் தன்னை யியம்பிடு மாறு கேளீர்**
**நண்பிடும் வாதம் பித்தம் நலங்கெட்டுத் தானம் வீங்கும்**
**புண்படுங் கரங்கள் சந்து புலைந்துடல் கடுத்து நோகும்**
**வண்புடன் வெடித்துச் சூலை வருவது ரணமீ தென்னே. 9**

(அ.பொ):- நண்பிடும் = தொந்தப்படும்; நலம் = இயல்பான நல்லதன்மை; தானம் = (உடலின் பற்பல) இடங்கள் புலைந்துடல் = (உடல்புலைந்து) உடலானது புலால் மணம் வீசும்படியாக; வண்பு = மிகுத்து; எண்பது கரப்பான்களின் பெயர் கூறப்படவில்லை. காண்கின்ற இடத்தைக் கொண்டு பெயர் கொடுக்க வேணுமென்பது குறிப்பு போலும்.

## பறங்கித் தொகை

**மேக மதுவு மெரிபறங்கி மேலாங் கல்லு நுணாக்காயும்**
**வேகப்படா முலை விடமும் வேண்டி நரம்பும் அருநீரும்**
**ஏகஞ் சண்டிச் சிங்கியுட னிதமா மையந் தன்னுடனே**
**தாகப் பறங்கி பதினாறுந் தயவா யறிந்து கொள்ளீரே. 10**

(அ.பொ):- 1. மேகப் பறங்கி, 2. மதுப் பறங்கி, 3. எரிப்பறங்கி, 4. மோகப் பறங்கி, 5. கற் பறங்கி, 6. நுணாக்காய்ப் பறங்கி, 7. முலைப் பறங்கி, 8. விடப் பறங்கி, 9.நரம்புப் பறங்கி, 10. நீர்ப் பறங்கி, 11. ஏகப் பறங்கி, 12. சண்டிப் பறங்கி, 13. சிங்கிப் பறங்கி, 14. வாதப் பறங்கி, 15. பித்தப் பறங்கி, 16. கபப் பறங்கி எனப் பறங்கி நோய் பதினாறாகும்.

## எரிசிங்கிக் குணம்

**தயமெரி சிங்கி செய்யும் நான்மறை அறியச் சொல்வேன்**
**பயமுறு பறங்கிப் பற்றி பகன்றிட எரிவ தாகும்**
**இயமுட னிறுக்கிக் கட்டி யெழுமுடன் தொழுனைப் பாஞ்சு**
**கயமபே ரச்சத்தில் கட்டிக் கடுப்பது ஆகு மென்றே. 11**

(அ.பொ):- இறுக்கி = வலிந்து; தொழுனை = மிக்கநீர்; பாஞ்சு = (பாய்ந்து) பெருகி.

## எரி பறங்கி

**வேண்டிய எரிபறங்கி வியல் வீணாத் தண்டில் நின்று**
**சுண்டிய கழுத்தைச் சுற்றிக் கரைந்துடன் குழிதான் வீழ்ந்து**
**வண்டுரை வலித்துச் சிமும் வாங்கிடு மன்னந் தேடா**
**பண்டு முன்குழ லினாளே பரிந்து டனுடலிற் றானே. 12**

(அ.பொ):- இயல் = இயல்பு; வீணாத்தண்டு = முதுகெலும்பு; கரைந்து = (என்புகள்) கடினத்தன்மை நீங்கி நீர்த்து; அன்னம் = உணவு.

## மேகப்பறங்கிக் குணம்

**மேகப் பறங்கிக் குணங்கேளீர் மீதே தேகம் பலபிறந்து**
**ஆக நரம்பில் பிசகுண்டா யறுவை தனையும் வேண்டாது**
**வேகங் கொடுத்துப் பெருரணங்கள் வெருண்ட வுடம்பு வெளுத்துரணம்**
**ஆக மனத்தில் துயரமுமா யடவாய்க் கண்ணு முறங்காதே. 13**

(அ.பொ):- பல பிறந்து = பல (கட்டிகள்) தோன்றி; ஆகம் = உடல்; பிசகு = (குற்றம்) செய்கையில் பேதங்கள் உண்டாதல்; வேகம் = வரைவு (பரவுதல், பருத்தல்); உறங்காது = தூங்காது.

## மோகினி (மோகப்) பறங்கிக் குணம்

**ஆகா மோகப்பறங்கி தானரிவை யவளைப் போல வந்துநின்று**
**சாகா வாரி வந்துடனே சதுராய்ப் பெண்போற் புணர்ச்சிக்கும்**
**வேகா வெடித்து வினைசெய்யும் விக்கல் வாந்தி மிகப்பெருத்துத்**
**தாகா ரத்த பித்தெடுத்துச் சதிராய்க் குலைந்து சாவாரே. 14**

(அ.பொ):- அரிவை = பெண்; சாகாவாரி = வற்றாத காமநீர் (விந்து); வேகா வெம்மை அதிகரித்து; வெடித்து = கட்டி கிளம்பி; தாகா = எரிச்சலுடன்; சதுர = திறம்; சதிர் = இலகு; குலைந்து = சீர்கெட்டு.

## பறங்கிகளுக்குச் செய்யும் விதம்

**குணங்குறி பறங்கி தன்னைச் கூறுவா ரறிந்து சொல்வேன்**
**வணங்கிய பச்சை சேர்வை வாகுடன் ரணத்திற் போட்டுப்**
**பணங்கிட ஆணி மாண்டிட பாருள்ளே யாருஞ் சேர்வை**
**இணங்கிட வதனிற் போட்டும் ஏந்தலாம் மருந்து கொள்ளே.15**

(அ.பொ):- குணங்குறி = இயல்பான தன்மைகளை குறித்து (ஆய்ந்து); வாகுடன் = திறமாக; பணங்கிட = சுருங்கிட; மாண்டிட = ஒழிய; ஆரும் = பொருத்தமான; சேர்வை = புண்களுக்கு மேலே போடும் கலப்பு மருந்து; ஏந்தலாம் = காத்து வளரச்செய்யும் தன்மை உடையன.

## யோனிக் சூலை

தானென்ற உமையன் செய்யுந் தாழ்ந்தவக் குணங்கள் சொல்வேன்
வேனென்ற அரிவை யர்க்கு வெளிப்புறம் யோனிப் பக்கங்
கானின்ற ரெண்டு பக்கங் கதுப்பினில் மெத்த புண்ணாம்
தானின்ற வாச னத்தில் தயவுடன் வெடித்துப் புண்ணாம். 16

(அ.பொ):- கதுப்பு = தசைப்பற்றான விளிம்புப் புறம்; ஆசனம் = எருவாய்ச் சுற்றுப்புறம்.

## உமையன்சிங்கிக் குணம்

கண்டாலு மைய சிங்கிதனைக் காணாத் தலத்தில் வெடித்துரணம்
பண்டே மேனிகுன்றி வற்றும் பார வுடலை யீடழித்து
வண்டார் சீழும் ரெத்தமதாய் வலுவைக் குறைத்து உள்ளடக்கி
கண்டால் மேகக் கட்டியது கடித்து வெடித்து ரணமாமே. 17

(அ.பொ):- காணத்தலம் = கண்ணுக்குப் புலனாகாத இடம்; மேனி = உடல்; குன்றி = இளைத்து.

## சண்டிப்பறங்கிக் குணம்

மேலும் சண்டிப் பறங்கிதனை மேலாம் ரணத்தில் திமிரெடுத்து
ஆலக் கரையக் காரமிடில் அகைந்து கலம்போல் மேல் வளரும்
காலம் பிரமெசி ழிரத்தங் கசிந்தே தினமும் வடிந்திறங்கும்
சால வுடம்பு பரதவித்துச் சதிரா யுடலு மடிந்திடுமே. 18

(அ.பொ):- திமிர் = உணர்ச்சியின்மை; ஆலம் = விடத்தன்மை; கரைய = நீங்க; அகைந்து = உயர்ந்து; கலம் = ஒருவகைப் பாத்திரம்; காலம்பிரம் = காலை வேளை; பரதவித்து = வருந்தி.

மடிந்தே விழுந்து போமளவும் மாறாச் சண்டிப் பறங்கிதனைக்
கடிந்தே கார மிட்டாலும் கனத்தே அமையாப் புரையோடும்
வடிந்தே மேனி குன்றவைத்து வயிறு கழிந்து வாந்திசெயும்
தொடர்ந்தே வுயிரு முள்ளமட்டுந் துயராஞ் சண்டி
பறங்கியிதே. 19

(அ.பொ):- மாறா = ஆறுவகையில் மாற்றல் கொள்ளாத; அமையாப் புரையோடும் = அடங்காததொளை நீண்டுப் பரவும்; துயர் = துன்பம்.

## சண்டிப்பறங்கி முதலானதற்கு மருத்துவம்

போகாச் சண்டிப் பறங்கிக்குப் பொருந்தும் பச்சைக் காரமிட்டு
ஆகாஞ் சிவப்புக் காரமிட்டு அடித்த ரணந்தான் கரைந்துடனே
போக்காம் வெள்ளைச் சேருவையும் பொருந்தும் பச்சைத்
தயிலமுடன்
வாக்காம் புரையில் வடியவிட்டு வழங்கக் குழாயில்
மேலூத்தே. 20

(அ.பொ):- வாக்காம் = நேரிலக்கற்ற வளைவு; வடிய = நிரம்பி வழியும்படி; குழாயில் மேலூத்தே = தக்க குழாயில் மருந்தை இட்டு புரைக்குள் செல்லும்படியாக ஊற்றுதல்.

## சிங்கிப்பறங்கிக் குணம்

ஆமே சிங்கிப் பறங்கிதனை அருக்கு நீரும் பெருக்கெடுத்துச்
சாமே சரீரங் குலைந்தோடி சயம் போலிருமிச் சலித்திருக்கும்
வேமே ரசங்கள் கசப்பாக்கி விரைந்து மூச்சும் வாந்தியதாம்
போமே யசன மருந்தாது மார்பில் வெடித்திடுமே. 21

(அ.பொ):-சயம் (க்ஷயம்) = இளைப்பு நோய்; ரசங்கள் = சுவைகள்.

வெடித்த ரணந்தான் வெடித்திருக்கும் மேலே சுருங்கிச் சிவப்பாகும்
பொடித்த ரணத்தில் வலியெடுத்துப் போகா முலைமேலே வளர்ந்து
அடித்த சதையும் வளர்ந்துவரும் அகண்டு விரிந்து புரையோடும்
கடித்த மதந்தான் வாயுலருங் கடிந்த மயக்க முண்டாமே. 22

(அ.பொ):- பொடித்த = வெம்மையுள்ள; அகண்டு = ஆழ்ந்து; விரிந்து = பரந்து.

உண்டா லிழியு மோக்காளம் மூளை யுருக்கி நீர்வடியும்
பண்டே மேனி குன்றிவரும் பருக்க அரைக்குஞ் சந்திடங்கள்
மண்டி யெரித்து மாய்வித்து மானங் கெடுத்து மதிகெட்டுத்
தண்டா மரையாள் தனதுமக்காள் தயவுமறந்து போய்விடுமே. 23

(அ.பொ):- இழியும் = கழிச்சலாகும்; மதி = புத்தி; தயவு = கண்ணோட்டம்.

## முலைப்பறங்கிக் குணம்

முட்டா முலையில் பறங்கி தனை முகிழ்க்கும் மேகச் சூலையினன்
கட்டு முடம்பு கடுப்பெடுத்துக் கண்ணுந் தூங்காக் கரடுகட்டி
விட்டா லுடம்பு சந்துதனை மேவிப் புடைத்து வெடிப்பெடுத்துப்
பட்டா முலையில் மேல்வெடித்துப் பதறிவுசந்து வளர்ந்திடுமே. 24

(அ.பொ):- கரடு = மேடு; புடைத்து = வீங்கி; உசந்து = உயர்ந்து.

வளர்ந்த முலைதான் மேல்பெருத்து வண்ண மிகவே வெளுப்பேறிச்
செழிந்தே சீழும் நீர்வடிந்து செல்லும் ரணங்கள் தள்ளாமல்
அளிந்தே புரையி லடுத்துநின்று ஆன வுடலஞ் சீணித்துப்
பழம்போல் ரணமுங்க கடுப்பெடுத்துப் பாவைக்காயும் வேண்டாதே. 25

(அ.பொ):- செழிந்து = மிகுந்து.

## நரம்புப்பறங்கிக் குணம்

சோக நரம்புப் பறங்கிதனைச் சுருட்டிக் கட்டுஞ் சந்துசந்தாய்
ஆகம் மெலிந்து கடுப்பெடுக்கும் அருக்கு நீரு மடங்காது
போகங் கொடுத்துப் பொருமலுமாய்ப் பொருந்து மசன மருந்தாது
ஆகங் குளிரு மழிசுரமு மாத்தாத் தணலு மாகியதே. 26

(அ.பொ):- சோக நரம்பு = உணர்ச்சி காட்டும் நரம்பு; சந்து சந்தாய் = முட்டிக்கு முட்டி; அடங்காது = நிற்காது; அழி சுரம் = உடலை மெலியச் செய்யும் சுரம்; மாத்தாத் தணல் = ஏறுதல் இறங்குதல் இல்லாதக் காய்ச்சல்.

அனல்தான் மிகுத்து அசனமற்று அருந்து மீனால் முளுக்கற்று
வனல்தா னரிவை போகத்தால் மாறாக் கிரந்தி பாசிபற்றி
தனல்தா னரம்பு டங்கிநின்று தானங் கெடுத்து வெடித்து நன்றாய்க்
கனலாய் வெடித்து வலியெடுத்துக் கணக்குமுடலும் வாதையிதே. 27

(அ.பொ):- அனல் = வெம்மை (சுரம்); அரிவை = பெண்கள்; உடங்கி = நொந்து; தானம் = (கிரந்தி தோன்றிய) இடம்; வாதை = வேதனை; கனல் = தீ.

## படாகப் பெயர்

மேகஞ் சூலை கற்படாகம் விதமாஞ் சதையில் வெடிப்படாகம்
சூகம் ரெத்தக் கட்டுடனே சுகமாங் கரைப்பு எரிப்படாகம்
வாகுஞ் சந்துப் படாகமுடன் வளமா யறிந்து சொல்வீ ரால்
ஆகஞ் சிவனா ருமைபாகத் தறிவிலு ணர்ந்து வுரைத்ததுவே. 28

படாகங்களின் பெயர்கள்:- 1. மேகப் படாகம், 2. சூலைப் படாகம், 3. கற்படாகம், 4. சதைப் படாகம், 5. வெடிப்படாகம்,

6. சூகப்படாகம், (சூகம்-நெல்வால், முள் மயிர்), 7.இரத்தப் படாகம். 8. கட்டுப்படாகம், 9. கரைப் படாகம், 10. எரிப்படாகம், 11. சந்துப் படாகம் என்பன.

குறிப்பு :- அழியாப்படாகம், சுருக்குப் படாகம், கரட்டுப் படாகம் என்பவை பாட்டில் கூறப்படவில்லை.

## மேகப் படாகக் குணம்

**மேகப் படாகக் குணங்கேளீர் விரைந்து அரிவை ரசத்தாலே**
**வேக மிகுத்த போகத்தால் விளம்பு மினுங் கரியாலே**
**ஆகம் பெருத்த நீர்க்கட்டால் அருந்து மசன மதுவாலே**
**பாக மிகுத்த படாகத்தில் பயவா மரணமும் மிகவாமே.** 29

(அ.பொ):- ரசத்தால் = மனத்திலெழும் ஒன்பான் ரசம். அவையாவன:- சிருங்காரம்; வீரம்; பெருநகை; கருணை; சினம்; குற்சை (இகழ்ச்சி); சாந்தம்; அற்பும்; அச்சம் என்பன. போகம் = பெண் சேர்க்கை; கரியால் = கரித் துணுக்குகளின் சேர்க்கையால்; பாகம் = பலவிதம்; பயவா = தோன்றும்.

(நம் முன்னோர்கள் கரித் துணுக்குகள் தாக்குதலால் இரணங்கள் உண்டாமென்பதை பல்லாண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர் என்பது விளங்குகிறது).

**மிகவே படாகம் மிகப்பெருத்து மேனி வறண்டு விதைநரம்பில்**
**ஆகங் குன்றி செரியாமை அதிக மதாகச் சோகமுடன்**
**வேகம் மிகுத்து வெப்பெடுத்து விரைந்து கணுக்கள் கரடுகட்டி**
**வாகும் அசன மிகக்குன்றி வலுவுங் குறைந்து வாடிடுமே.** 30

(அ.பொ):- கணு = சிறு என்புகளின் மூட்டு (கை, கால் விரல் எலும்பு மூட்டுகள் போன்றவை). கரடு கட்டி = வலிந்து மேடு கண்டு; இயக்கம் கெட்டு.

வாடும் மேகப் படாகந்தான் வரிநா விழுத்து வாயுளறும்
சாடும் நெஞ்சில் திடுக்கிட்டுச் சரீரங் குலைந்து உருவழியும்
நாடும் சயமும் நீரிழிவும் நலக்க மெடுத்து வாந்தி பண்ணும்
பாடும் எரிவும் மிகப்பெருத்துப் பார உடலை அழித்திடுமே. 31

(அ.பொ):- வரிநா = நரம்புகளின் வரிசையான கட்டுகளமைந்த நாக்கு; இழுத்து = ஒரு பக்கமாக நகர்த்தப்பட்டு; உளறும் = தடுமாறிப் பேசும்; சரீரம் = உடல்; பாடும் = இன்னல்கள்.

## அழியாப் படாகம்

அழியாப் படாகக் குணங்கேளீர் அழியாச் சந்தில் வெடிப் பெடுத்துக்
குழியாய்ச் சூழ்ந்து புரையோடி குறம்போல் கட்டும் கொடி நரம்பில்
வெளியாய் நரம்பும் எலும்புகண்டு மேனி வெளுத்து மிகநாறும்
அழியாக் கடைந்த நஞ்சதுபோல் கட்டி ரணத்தில் எரிப்போமே. 32

(அ.பொ):- சூழ்ந்து = சுற்றி; குறம் = குறி; 'வெளியாய் நரம்பும் எலும்புகண்டு' என்ற அடியை நரம்பும் எலும்பும் வெளியாய்க் கண்டு என்றமைத்துப் பொருள் கொள்க. தசையெல்லாம் கரைந்து போய்விடு மென்பது குறிப்பு.

## சுருக்குப் படாகம்

சுருக்குப் படாகம் மேல்நோக்கிக் கள்ளி மிகவே பூத்தாற்போல்
வருக்குங் கால்கள் மிகச்சோம்பி வரிசை யழிந்து விழிகெட்டுக்
கருக்க இருட்டி நாவுலரும் மோடு நடையை கெடுத்தேகிப்
பருக்கும் பாயில் பரதவித்துப் பண்ணும் மருந்தும் பொய்யாமே. 33

(அ.பொ):- வருக்கும் (வருகும்) = தோன்றும்; சோம்பி = இளைத்து; (வழக்கிலுள்ள சொல்). வரிசை = வன்மை; மோடு = பெருமை; பரதவித்து = வருந்தி.

## கல்லுப் படாகம்

**கல்லுப் படாகங் குணங்கேளீர் கனத்த வுடம்பு திமிரெடுத்து**
**வல்ல வாதக் கரப்பானால் வகுத்த மேக மிகக்கூட்டி**
**உள்ளுங் கலந்து உருண்டுசந்தில் உருகரு வழித்து வெடிப்பேறித்**
**தள்ளும் சீழும் ரெத்தமுமாய்த் தடங்கண் ரணத்தில் திமிராமே. 34**

(அ.பொ):- உருகரு = உருவத்தையும் உயிரையும்; ஏறி = மிகுத்து; தடங்கண் = பரந்த இடம்.

**திமிரே மிகுத்து வலியில்லை தினவு மிகுத்துத் தீயெரிக்கும்**
**அமுரு மொருக்கால் மேல்வீசும் அட்டை திணமாய் ரணமிருக்கும்**
**திமிரும் உடம்பு அதைப்பெடுக்கும் திகைய வாங்கிக் கடுப்பேறும்**
**பமிரும் மலமு தானிருக்கும் பகரும் அன்னம் அருந்தாதே. 35**

(அ.பொ):- அட்டைத் திணமாய் = அட்டையைப் போலத் திண்மை (வலிமையும், உறுதியும்) உடையதாக; அதைப்பு = வீக்கம்.

## கரட்டுப் படாகம்

**மண்வினை எலும்பு மார்முதுகு மடங்கத் தானும் வெடித்தேகி**
**தன்வினை அறியா வாயுவத்தி தாகம் மிகுத்து சோகமதாய்**
**பொன்வினை வாயில் ரணம்வெடித்துப் புலவே யதுபோல் தோற்றுவிக்கும்**
**கண்பல விழுந்து கரையாமல் கரட்டுப் படாகம் இதுவாமே. 36**

(அ.பொ):- மார் = மார்பு; அடங்க = முற்றிலும்; அத்தி = எலும்பு; சோகம் = வருத்தம்; புலவு = ஊன் (ஊன் மணம்) கண் பல = பல தொளைகள்.

### காரச் சேர்வை

கரையாக் கல்லுப் படாகத்தைக் கரைக்குங் காரச் சேர்வையால்
விரையாத் திர்ந்து வேரற்றால் வேண்டும் தைலம்
குழிச்வேர்வை
பரையா ளேறும் சிவனருளால் பழுத்த ரணமும்
தீர்ந்திடுமே. 37

(அ.பொ):- விரையாத்திர்ந்து = விரைவாக (நோய்) குணமடைந்து; பரையாளேறும் சிவன் = அர்த்த நாரீச்சுவரன்.

குறிப்பு:- இப்பாடலுக்கு மூன்றே அடிகள் தான் சுவடியில் உள்ளன.

### சிங்கிவகைப் பெயர்

மேகங் கட்டும் வறட்சிசிங்கி மேல்நீரு பையன் ராசசிங்கி
தாகங் கட்டும் தரைச்சிங்கி தடியா னாக மிசிப்பிசிவும்
வாகச் சிங்கி நுணாச்சிங்கி வளமா மரச னுறும்சிங்கி
பாகச் சிங்கி பதினாறும் பதிவா யறிந்து கொள்வீரே. 38

*1. மேகக்சிங்கி, 2. வறட்சிங்கி, 3. மேல்சிங்கி, 4. நீர் சிங்கி, 5. உபையன்சிங்கி, 6.ராசசிங்கி, 7.தாகசிங்கி, 8.கட்டுச் சிங்கி, 9. தரைசிங்கி, 10.தடியான்சிங்கி, 11. இசிபிப்சிவு சிங்கி, 12. ஆகச்சிங்கி, 13. புவாகச்சிங்கி, 14. நுணாச்சிங்கி, 15. அரசனுறும்சிங்கி, 16.பாகச்சிங்கி என்பன சிங்கிகளின் பெயர்களாகும்.*

### மேகச் சிங்கி

கொள்ளீர் மேகச் சிங்கிதன்னைக் கொழுக்கும் மேகக் கொம்பதிலே
தள்ளீர் பெரிய மேகத்தால் தானும் வருவ மீறாலே
அள்ளீர் அசனம் கொள்ளாமல் ஆன மலமுஞ் சலங்கட்டி
வெள்ளீர் அணைந்தும் கோழிதின்று வேகமு ருங்கை
மரந்தானே. 39

(அ.பொ):- கொழுக்கும் = வளப்பமுடன் வளரும்.

மறந்தால் உண்ணா வறட்சிவரும் வகையாய் மேகந் தறிகிவிடும்
பறந்தால் உடம்பு வறட்சிகொண்டு பகையாம் மருந்தால்
உடம்புகெட்டு
வருந்தா துடலில் கடுப்பெடுத்து வாகாய் வெடித்து ரணமாகும்
கரந்த வீணாத் தண்டுதனில் கடுகு வெடித்து ரணமாமே. 40

(அ.பொ):- உண்ணா = (உள் + நா) உள் நாக்கில்; கடுகு வெடித்து = கடுகுபோலக் குரு கிளம்பி வெடித்துப் புண்ணாகும்; கரந்த = மறைந்துநின்ற.

மேலாம் மேகச் சிங்கிதான் விரைந்து சிவப்பு மாந்துளிர்போல்
கோலாம் பிறவே கடுப்பெடுத்துக் குதத்தில் ரணந்தான்
மிகவாகும்
ஆலாம் பிறந்த வறட்சியதால் அடங்கா திருமல் அனலெடுக்கும்
போலாக் கலங்கி பெண்மறந்து பொருந்த உறங்க ஒட்டாதே. 41

(அ.பொ):- குதம் = எருவாய்; பொருந்த = அமைந்ததாக; ஆலாம் = (ஆலம் என்பது எதுகை நோக்கி நீண்டது போலும்) விடம்; போலாக் கலங்கி = (போல என்பதன் நீட்டல் விகாரம் போல) மனந்தடுமாறி; பொருந்த = அமைதியாக.

ஒட்டா மேகச் சிங்கிதான் ஒடுவும் வடுவும் மிகவெரிப்பு
கட்டா மிருக்கிக் கடுப்பெடுத்துக் காய்ச்சல் குளிரும் பரபரக்கும்
விட்டால ரிவை தனையாசை வேறாய் மேனி குன்றுவிக்கும்
பட்டார லைந்து பரிதவித்துப் பாங்கில் அசனம் கொள்ளாதே.
42

(அ.பொ):- ஒடு = பரவுந்த தன்மையும் திண்மையும் உடைய ஒரு வகைக்கட்டி; வடு = இரணம் (ஆறியபின் தோன்றும் அடையாளமும் ஆகும்); பரபரக்கும் = அமைதி யின்றி நோய்ப்படும், தினவெடுக்கும்.

கொள்ளா மேகக் சிங்கிக்குக் கொட்டிய கார மாகாது
வள்ளம் பெரிய குங்குமநீர் வாகாய்ச் சீலை தனில்ஆட்டி
மெல்ல எடுத்துப் புண்ணிலிட்டு மியங்குக் குளிர்ந்த
சேர்வையினால்
அன்ன மருந்தும் உள்கொடுத்து அளங்காத் தைலம் மேல்பூசே.43

(அ.பொ):- கொட்டிய = கொடியதான; ஆட்டி = நனைத்து; அன்ன = அத்தன்மைத்தான (காரமில்லாததான); அளங்காத் தைலம் = துன்புறுத்தாத தைலம் (எரிச்சல், காரம், முதலியவை இல்லாத என்பது குறிப்பு)

பூசவ டங்கும் மெரிவுகள்தாம் புகர்ந்து சேர்க்க இருமலறும்
பூசச் சிவந்த புண்காயும் குளிர்ந்த நீரும் பெருகாதே
மேச மடங்கி மிகவாகும் மேலாங் கடுப்பு விக்கலறும்
தாசம் பளிங்கு போல்நிறமாய்த் தானும் பெருத்துச் சதிராமே.44

(அ.பொ):- மேசம் = (மேசகம் என்பதன் கடைக்குறை) மலினம், கருமை; அறும் = நீங்கும்.

## இராச சிங்கி

மேலாம் ராச சிங்கிதனை வெகுண்டே பிறக்குங் குணங்கேளீர்
மேலாம் விழியில் மருந்துதனில் வெடித்து வாதக் கரப்பானால்
ஆலாங் கமலம் மிகப்பெருத்து ஆனைமதம்போல் நீரிறிங்கும்
வால வயதில் கிரந்தியினால் வருமே ராச சிங்கியிதே. 45

(அ.பொ):- கமலம் = பரவலாக உள்ள பாகம் (தட்டு); வால வயது = இளம் பிராயம்.

ராச வர்த்தினி பிறக்கும் நயன்ற உடல் குன்றுவிக்கும்
போச மதனக் குழலாளைப் பொருந்த மனது வாராது
ஆகங் குறைந்து அரோசிபற்றி அதிகச் சோப மதாய்ப்
பாசம் மாறிக் கழுத்தடியில் பண்பாய் வெடித்து ரணமாமே.46

(அ.பொ):- ராசவர்த்தினி = மாமன்னன் போன்ற வசீகரத் தோற்றம்; குன்றுவிக்கும் = குறைக்கும்; பொருந்த புணர; அரோசி = சுவையற்றதன்மை.

ஆமே ரணமும் சிவந்திருக்கும் அகன்று விரிந்து கடுப்பெடுக்கும்
போமே புரையும் முளைவிழுந்து பொருத்த இறைச்சி நீர்வடியும்
சாமே சரீரம் குலைந்துமிகச் சடுதி யிருமல் சுவாசமுமாய்
வேமே உடம்பு கடுப்பெடுத்து வெகுண்டு கைகால்
குடைச்சலுமே. 47

(அ.பொ):- சடுதி = விரைவு.

### சிங்கி வகைக்கு மருந்து

தூங்காச் சிங்கித் துயரளித்துத் தொலைவா மஞ்சள் காரமிடு
நீங்கா நீலத் தண்ணிவிட்டு நிலைக்க ஆணிமுளை கரைந்தால்
தங்காப் பச்சைச் சிலையிட்டுத் தயவாம் இரணந்தான்
செற்றக்கால்
ஆங்காய்த் தயிருங் கொண்டாக் காலடங்கத் திருங் கண்டீரே.48

(அ.பொ):- தொலைவாம் = தீர்வாம்; ஆணிமுளை = நீண்ட பெரிய முளை; செற்றாக்கால் = ஒழிந்ததானால்.

### இரணங்களுக்குக் குழம்பு

நாவிக் கவுரி நேர்வாளம்
நலமாஞ் சூதம் லிங்கமுடன்
பூவில் வகைக்குப் பலங்காலாய்ப்
பொருந்துங் கெந்தகந் துருசுடனே
ஆவின் விளி பலமரையாம்
இருந்தும் பச்சைப் பலமிரண்டு
வாவும் தேனு மெள்ளெண்ணெய்
வருந்த அரைத்து வழித்திடுமே. 49

(அ.பொ):- நாவி = நாபிக்கிழங்கு; சூதம் = இரசம்; ஆவின்விளி = பசு கூப்பிடும் ஒலி (அம்மா) இது அம்மான் பச்சரிசையைக் குறிக்கும்; (ஆ) அருந்தும் பச்சை = அறுகம்புல்; அவாவும் = ஆசைகொள்ளும்.

வழிந்த குட்டம் நெடிவாசம் வாகாய் முளையும் மூலமறும்
துளிர்ந்த நாயும் முபயநரித் துடித்த விடங்கள் தொண்ணூறும்
அளிதே பெருத்த அரையாப்பும் அடங்காக் கட்டி அழிகுட்டம்
மழிந்தே மதனக் குழலாளே மார்பி லாணி கரைந்திடுமே. 50

(அ.பொ):- வழிந்த = சீழ் முதலானவை பெருகிய; உபயநரி = சிறுநரி, பெருநரியானவை; அழிகுட்டம் = உறுப்புகள் அழியும் குட்டநோய்.

## இரணங்களுக்குக் குழம்பு

போமே வெள்ளைக் கெவுரியுடன் பொருந்துஞ் சூத மரிதாரம்
ஆமே மிருதார் லிங்கமுடன் ஆன வகைக்குத் தான்கழஞ்சு
தாமே வெட்டுப் பலம்நாலு தரிக்குங் குக்கில் பலமிரண்டு
போமே எண்ணெய் தனிலரைத்துப் போந்த தண்ணீர்
தனிற்கழுவே. 51

(அ.பொ):- வெள்ளை = வெள்ளைப் பாடாணம்; வெட்டு = இரசச் செந்தூரம்; மிருதார் = மிருதாரசிங்கி; குக்கில் = மைசாட்சிக் குங்கிலியம்.

கழுவிச் சீலை தனி லூட்டிக் கதித்த பறங்கிக் கடிவிடமும்
அழுந்த சூலை அரையாப்பு ஆன பிளவை பவுத்திரமும்
விழுந்த விடங்க ளாரமுடன் வீழுங் குட்டம் வெடிசன்னி
நழுந்த பச்சைத் தடவிடவே நடுங்கி விழுந்து
போய்விடுமே. 52

(அ.பொ):- ஊட்டி = தடவி; நழுந்த = நழுவுந்தன்மை யுடையதான.

## பிளவை இரணங்களுக்கு எண்ணெய்

சீனாக் காரம் நேர்வாளம் சிரா யரைத்தெண் ணெய்யிலே
பானாட் பிளவைப் புண்ணிலிட பழுக்கும் வேதனை மாறிவிடும்
தானாய்ப் போக வுடையுமது சலமும் நீரும் ஆணியும் போம்
சீனாக் காரம் வெண்ணெய் புண்தீர்க்கு மென்றார் மாமுனியே.
53

(அ.பொ):- சீனாக்காரம் = படிகாரம்; தானாய்ப்போக = தானாகவே ஒழிந்திட; தீர்க்கும் = ஆற்றும்.

## ஆணிகளுக்கும் மூலமுளை பவுத்திரத்திற்கும் காரம்

கெவுரியைப் பொடித்து நன்றாய்க் கேளின் னமாம ணக்கத்
தவியெண்ணெய் தன்னி லிட்டுத் தானதைக் குழைத்துக் கொண்டு
குவிந்திடு மாணி தன்னில் குணமுடன் போட்ட போது
அவிந்திடு மாணி யெல்லா மலறியே யெழுந்து போமே. 54

(அ.பொ):- அவி எண்ணெய் = வேகவைத்து எடுத்த எண்ணெய் (கொதித்த தைலம்); குவிந்து = கூராக இருந்து; அவிந்திடும் (கரைந்து) அழிந்துவிடும்.

வெள்ளெருக்கம் நாராக்கிப் புறணி போக்கி
விடமான மருந்தை யதன்மே லேயப்பி
உள்ளிருக்குந் தமரளவு மேலே குத்தி
யோடுமெழு மூன்றுனாளப் பகர்ந்து கட்டி
நள்ளனைய தயிலஞ்சோர வைத்துக் கட்டில்
நாறுமுளையது விழுந்து நாச மாகும்
கள்ளவிழுங் குழலாளே நறுநெய் விட்டுக்
கைவிரலால் சுத்திவை களைப்புப்போமே. 55

(அ.பொ):- புறணி = மேல்தோல்; விடமான = விடத்தன்மை வாய்ந்த; தமர்= தொளை; சோர= ஒழுக; நாறுமுளை = தீய நாற்றமுள்ள (மூல) முளை; களைப்பு = ஒய்ச்சல்.

## காரம்

சவ்வீரம் கழுஞ்சு மூணு தாய்முலைப் பாலிற் றானும்
நவ்வியனா ளூற வைத்து நல்லெலு மிச்சஞ் சாற்றில்
கவ்வியவே அரைத்து நல்ல கெட்டியாய் இருக்கும் போது
உவ்வியவே புரைகட் கெல்லாம் போடுவாய் காரந் தானே. 56

காராந்தான் மூன்று நாள்தாம் கட்டுவாய் தயிருஞ் சோறும்
தாரினிற் புரைகட் டோடே தான்விழும் விழுந்த பின்னை
மூரிய முலா முண்டாக்கி முருரணந் தனிலே போடே
தேயி விரண மெல்லாஞ் செரிந்து தானாறுந் தானே.

(அ.பொ): மூரிய = வல்லமை பொருந்திய; முலாம் = மேல் பூசும் மருந்து.

## முலாம்

தானென்ற தேங்காய் எண்ணெய் தன்னிலே மெழுகு போட்டு
ஊனென்ற குக்கிலோடே ஊரெரு முட்டைச் சாம்பல்
வானென்ற மண்டை யோடு மாச்சிக்காய் குந்தி ரிக்கம்
நானென்ற தெல்லாஞ் சேர்த்து நலமுடன் பொடித்துப் போடே. 58

(அ.பொ): குந்திரிக்கம் = குங்கிலியம்.

போட்டுமே காய்ச்சிக் கொண்டு புண்ணதில் விட்டுக் கட்ட
தேட்டமாய்ச் சிலுப்பி யந்த சேர்முலா மெடுத்து வைத்து
ஈட்டமாய்த் தராசு தன்னில் இலங்கவே தடவிப் போட
கூட்டமாய்ப் புண்க ளெல்லாம் நிலைகுலைந் தேகும் பாரே. 59

(அ.பொ): சிலுப்பி = கடைந்து; தராசு = ஈசுர மூலி இலை.

## சிலந்தி இரணங்களுக்கு மருந்து

**ஆறாத முகுஞ் சிலந்திக்கும் ஆன கடுக்காய் தான்வெதுப்பிக்**
**கூறாய்க் கொட்டைதனைப் போக்கிக் குறித்துப் பொடீத்துப்**
**புண்ணிலிட**
**ஆறாப் புண்ணும் ஆறிவிடும் அப்பொடி வெண்ணெய்தனில்**
**போட்டுத்**
**தேறாப் புண்ணுக் கிட்டுவரச் சிலந்திப் புண்கள் தீர்ந்திடுமே. 60**

(அ.பொ):- வெதுப்பி = சிறிது புன்வறுப்பாக வறுத்து; (சிவக்க வறுத்தலாகாதென்பது குறிப்பு).

## பச்சை சேர்வை

**நாடும் பச்சைச் சேர்வைக்கு நல்ல நீல மரிதாரம்**
**தேடும் வகைக்குப் பலமரைதான் தெளிந்த வெட்டு பலம்ரெண்டு**
**ஏடு அரைப்ப தெள்ளெண்ணெய் யிதமாய்த் தண்ணி விட்ட**
**ரைத்து**
**ஆடும் அனைய குழலாளே அறிவாய்ச் சீலை தனிலூட்டே. 61**

(அ.பொ):- நீலம் = மயில் துத்தம், (துருசு); வெட்டு = (பச்சை வெட்டு) இரச செந்தூரம் (கடைச் சரக்கு); ஊட்டே = (சீலையில்) தடவி.

**ஊட்டி எடுத்து ரணந்தன்னில் உதிரக் கிரந்தி உள்வீக்கம்**
**நாட்டிற் பெரிய நாய்முள்ளும் நலியுங் கிரந்தி நறுங்குன்றி**
**ஆட்டிச் சிலையு மரிகிரந்தி ஆறாப் புண்ணும் பவுத்திரமும்**
**வாட்டி லனையக் குழலாளே வாடி மயங்கிப் போய்விடுமே. 62**

(அ.பொ):- உதிரம் = செந்நீர் (இரத்தம்); நாய்முள் = தோலில் வெடிப்புண்டாகி அதன்வழியே நாயின் நகம் போன்ற கூரிய முளைகள் பலதோன்றும் நோய்; நறுங்குன்றி =

புளி நறளை விதைபோலவும் குன்றிபோலவும் கடினமான தசைக் கட்டிகள் அடர்த்தியாக எழும்பும் நோய். அரிகிரந்தி = சிறுகச் சிறுக சதையை அரித்துக்கொண்டு வளரும் நோய்.

## மேலெரிவுக்குக் காரம்

**ஆவரை நெல்லி யல்லி யதனுடன் பூலா வேரும்**
**கோவதன் வெண்ணெய் கூட்டிக் குழைத்துடன் மேலே பூசி**
**பாவையே கடுப்பும் வெப்பும் பறந்துதான் குளிரு மென்ன**
**ஓவியம் போல முன்னோர் உரைத்தனர் படியுள் ளோர்க்கே.63**

(அ.பொ):- பறந்து = விரைந்து; படியுள்ளோர் = புவியினில் வாழ்பவர்களுக்கு.

## வெள்ளைக் காரம்

**வெள்ளைக் கெவுரி குங்கிலியம் வேண்டுஞ் சவடு வகைஒன்று**
**தள்ளை யத்த வெள்ளைபத்து தனிய வரைத்துப் பொடியாக்கி**
**வெள்ளைத் துருசு சமன்போட்டு விளங்கப் பொடியாய் தான் செய்து**
**தள்ளும் சதைகள் முளைகரையத் தனக்கு வெள்ளைக் காரமிதே. 64**

(அ.பொ):- சவடு = சவுட்டுப்பு; தள்ளும் சதை = துர்மாமிச வளர்ச்சி; வெள்ளை = முதலது வெள்ளைப் பாடாணம், இரண்டாவது மருந்து வெள்ளை என்பதாம்.

## மஞ்சள் காரம்

**மஞ்சள் கெவுரி அரிதாரம் வகையாஞ் சுன்னந் துத்தமுடன்**
**அஞ்ச மிருதார் சுன்னமுடன் அரிய வெள்ளைக் குங்கிலியம்**
**மிஞ்ச வகைக்குப் பலந்தானும் விளங்கச் சீலை சமனாக**
**வஞ்ச இடித்துப் பொடியாக்கி மதியாச் சண்டி முளையிலிடே. 65**

(அ.பொ):- சுன்னம் = சுண்ணாம்பு; மிருதார் சுண்ணம் = மிருதார சிங்கிச் சுண்ணம்; சீலை = துணி சுட்ட சாம்பல்.

## பச்சைக் காரம்

**மிருதார் சிங்கி யரிதாரம் மிடுக்கு வெள்ளைத் துருசுடனே**
**பருக்கா வெள்ளை மருந்ததுவும் பாங்காய்த் துணியுஞ் சமனாக**
**நெருக்கா திடித்துப்பொடியாக்கி நிலைக்குஞ் சண்டி பவுத்திரமும்**
**அருகா மூலங் குட்டமறு மதிகப் பச்சைக் காரமிதே. 66**

(அ.பொ):- மிடுக்கு = வலிவு; வெள்ளை மருந்து = மருந்து வெள்ளை.

## குளிர்ந்த வெள்ளைக்காரம்

**சங்கு கபால வெள்ளையுடன் சாருந் துத்தம் வெள்ளைரசம்**
**மங்க வெளுத்த துணிசமனாய் வணங்கக் கூட்டி பொடியாக்கித்**
**தங்கா திடவும் நீர்வடியும் தயங்கும் பிளவை பவுத்திரமும்**
**எங்கன் பறங்கி எரிசூலை யிவையே குளிரும் வெள்ளையிலே. 67**

(அ.பொ):- கபால வெள்ளை = மண்டையோடு பற்பம்; துத்தம் = பால் துத்தம்; வெள்ளை ரசம் = இரச பற்பம் (பூரம், மங்கவெளுத்த துணி = துணி சுட்ட சாம்பல்)

## குளிர்ந்த பச்சைக்காரம்

**மிருதார் சங்கு மஞ்சளுடன் மிக்கக் கறுத்த குங்கிலியம்**
**அரவே வெள்ளைத் துணிசமனாய் அடங்கா திடித்துப் பொடிசெய்து**
**மறியா தெரித்த பறங்கிபபுத்து மார்பிற் பிளவை பவுத்திரமும்**
**குறியாய்ப் புண்க ளத்தனையும் குளிர்ந்தே போகும் பச்சையிதே. 68**

(அ.பொ):- கறுத்த குங்கிலியம் = கருங்குங்கிலியம் (மைசாசிட்யல்ல); மறியாத் தெரித்த = மடியாத முன் கண்டு பிடிக்கப்பட்ட.

## குளிர்ந்த சிவப்புக்காரம்

**துத்தங் காவி மஞ்சளுடன் முலங்குஞ் சங்கு தலையோடு**
**அந்தச் சுண்ணங் குங்கிலியம் ஆன துணியுஞ் சமனாக**
**மெத்த இடித்து எரிரணத்தின் மேலே போடப் பிளவைப்புண்**
**செத்த சிங்கி பவுத்திரமுந் தீர்க்குங் குளிர்ந்த சிவப்பிதுவே. 69**

(அ.பொ):- காவி = காவிக்கல்; செத்த சிங்கி = ஆங்காங்கு அழுகல் தோற்றும் சிங்கி நோய்கள்.

## சகல புண்களுக்கும் பொடி

**திடங்கொள் கெவுரி அரிதாரஞ் செவ்வீரம் வெள்ளைத் துத்தமுடன்**
**இடங்கொள் காரஞ் சவுடுசுண்ண மினிய நீல மிருதாரம்**
**தடங்கொள் வெள்ளைக் குக்கிலொடு அணியுந் துணியுஞ் சமனாக**
**மடங்கொள் இடித்துக் பொடியாக்கி வலிய குட்டந்தனிற் போடே. 70**

(அ.பொ):- திடங்கொள் = வலிமை பொருந்திய; காரம் = வெங்காரம்; வெள்ளை குக்கில் = மருந்து வெள்ளை (வெள்ளைக் குங்கிலியம்)

**போடக் குட்டம் பதினெட்டும் பொருந்திச் சாகுந் திமிரமெல்லாம்**
**ஆடு மரவ மெலிக்கடியு மரிய தேளும் பேய்நரியும்**
**தோடிக் கல்லு முளைச்சதையுந் துடிங்குங் கட்டி கரண்களுடன்**
**மூடாக் குள்ளான் மூலமுளை மூண்ட பறங்கி போய்விடுமே.71**

(அ.பொ):- கரண் = ஓர் வகைக் கழலை.

## இரணத்திற்குக் கறுப்புச் சீலை

**மஞ்சள் வசம்பு எலுக்கிலையும் மைக்கச் சுட்டுக் கரியாக்கி**
**அஞ்சுந் துருசு துத்தமுடன் அரியக் கெவுரி வெள்ளைச்சங்கு**
**கஞ்ச முகத்தாள் முலைப்பாலுங் கையான் தகரையதின் சாறும்**
**தஞ்ச அரைத்துத் துணியதனில் தடவுயுள் மேற்போட நன்றே.72**

(அ.பொ):- மைக்க = கருப்பாக்க; கஞ்சம் = தாமரை.

**நன்றே விடத்தின் பிணிதிரும் நடுக்குஞ் சண்டிப் புண்திரும்**
**குன்றா திமிரத் தினவுப்புண் கொடிய சிரங்கு ஓடுவும் போம்**
**கன்றிப் புடைக்கும் புண்திருங் கட்டிய சொரியின் புண்களெல்லாம்**
**இன்றே போவோ மென்றுசொல்லி யேகுங் கறுப்புச் சிலைக்கே. 73**

(அ.பொ):- விடம் = நச்சுக்கடிப்புண்; சண்டிப்புண் = ஆறாமல் துன்பம் தரும்புண்; கன்றி = கறுத்து; புடைக்கும் = வீங்கும்.

## மஞ்சள் சீலை

**சூதங் கெவுரி வீரமுடன் சொல்லுங் கார மிருதாரம்**
**போதே வேலங் கடுக்காயும் புகழும் லிங்கக் கடகசிங்கி**
**நீதி சமனாம் அண்டமதை யுடைத்து வெள்ளை நீர்விட்டுச்**
**சேதப் படாமல் சாமம்ரெண்டு சிந்தை தெளியத் தானரையே.74**

(அ.பொ):- காரம் = வெங்காரம்; கடகசிங்கி = கற்கடகசிங்கி; அண்டம் = கோழிமுட்டை

**அரைத்தே சிலை தன்னூட்டி யடவாய் நாதச் சீலைதனை**
**உரைத்து ஆணிக் கலமுளையில் போட வருகு முண்மையிது**

கரைத்து முளையும் நீராகுங் கட்டிய ஆணிதான் விழுகும்
மரைத்து முனிவ னுரைத்தவுண்மை மஞ்சள் சீலைக் காரமிதே. 75

(அ.பொ):- அருகும் = குறையும்.

## சிவப்புச் சீலை

சூதம் லிங்க மரிதாரஞ் சொல்லுங் கெவுரி மிருதாரி
சிதக் காவிமண் சமனாய்ச் சேர்த்துத் தேசிப் பழச்சாற்றில்
மாதர் அமுரி முலைப்பாலும் விட்டே அரைத்துத் தானெடுத்துக்
கோதிற் சீலை தனிலூட்டிக் கொடியரணத்தின் மேற்போடே.76

(அ.பொ):- தேசிப்பழம் = எலுமிச்சம் பழம்; அமுரி = சிறுவர்களின் சிறுநீர்; கோதில்சீலை = குற்றமற்ற (சுத்தமான) துணி

போடச் சண்டி நுணாக்கள்ளிப் புகலற் கரிய பிளவையுடன்
தோடப் புழுவால் வந்தொரு துடுக்காம் பவுத்திர மெழுவகையும்
வாடக் குரோதமே செய்யும் வலிய ஆலக் கரணையெல்லாம்
நாடக் கிடமே யில்லையெனச் செய்யுஞ் சிவப்புச் சிலைநன்றே. 77

(அ.பொ):- குரோதம் = சினம் (கொடுமை); ஆலக்கரணை = நச்சுத் தன்மைகொண்ட சுழலை; நாடக்கிடம் = நெருங்க இடம்.

## இரணத்திற்கு வெள்ளைச் சீலை

சங்கு சூதங் குங்கிலியம் தயங்கும் வெள்ளைத் தலையோடு
எங்குஞ் சவடு சுண்ணாம்பு இதமா முலைப்பால் விட்டரைத்துத்
தங்குஞ் சிலை தனிலூட்டித் தயங்கும் பிளவை தளிர்ப்புத்து
மங்குஞ் சண்டி தனமறுக்கும் வலிய வெள்ளைச் சிலையிதே.78

(அ.பொ):- தளிர்ப்புத்து = வளர்வதின் அடையாளங்கொண்ட புற்று நோய்கள்; சண்டித்தனம் அறுக்கும் = பிடிவாத குணத்தை நீக்கும்; வலிய = திறம் வாய்ந்த.

## நீலச் சீலை

**வெந்த இலையுஞ் சங்கு துத்தம் வேண்டுஞ் சூதம் வீரமுடன்**
**முந்துந் தாரஞ் சவட்டுப்பு மூர்க்க நீலஞ் சமனாக**
**பந்து முலைப்பால் விட்டரைத்துப் பழைய சீலை தனிலூட்டி**
**வந்த திமிராங் கரண்கட்டி மாற்றும் நீலச் சீலையிதே. 79**

(அ.பொ):- வெந்த இலை = அரைத்துப் பற்றிட வேக்காடுதரும் இலையாகிய செங்கொடிவேலி இலை; மூர்க்கம் = சுறுசுறுப்புள்ள (சினந்தரும்).

## புரைக்குத் திரி

**துருசு துத்தம் வங்காளம் துலங்குஞ் சூத மரிதாரம்**
**அரங்கு நீலங் கெந்தகமும் மடரும் பச்சை வெட்டுடனே**
**திறமா மிதனை நீர் விட்டரைத்துத் தயங்கச் சீலை தனிலூட்டி**
**மரங்கப் புரையுஞ் சதைதின்னு மரிய திரியை யேற்றிவிடே. 80**

(அ.பொ):- வங்காளம் = வெங்காளப் பச்சை; பச்சை வெட்டு = இரச செந்தூரம்; சதைதின்னும் = சதையைக் கரைத்து விடும்படியான.

## புரைகளுக்குக் காரத் தண்ணீர்

**ஆராவ முதே ஆரணங்கே அரிய தண்ணி வகைகேளாய்**
**நேராய் லிங்கச் செந்தூரம் நிலைகுங் கிலியங் குக்கிலுடன்**
**சிறாங் காவி மண்சிலை திருந்தும் வெள்ளைச் சமனாக**
**பேராஞ் சாராயம் விட்டரைத்துப் பெரிய குப்பி தனிலடையே. 81**

(அ.பொ):- வெள்ளை = மருந்து வெள்ளைப்பாடாணம்

அடைத்த மருந்து புரையிலிட ஆறா ரணமு மெரிவடங்கும்
உடைத்த புரையும் பவுத்திரமும் உளவில் படாகந் தோடகையும்
வெடித்த காதி னெழுச்சிகளும் மேலிற் பருவும் வினைதீரும்
மடித்த சிவப்பு நீர் விடவே மாறும் விரணம் வடிவாமே. 82

(அ.பொ):- தோடகை = ஒரு வகைக் கழலை; பரு = தசைக்கட்டி;
வடிவாம் = (புண்ணாறிய பின்) உடல் அழகு பெறும்.

## இரணத்துக்குக் குளிர்ந்த நீலம்

சொல்லுங் கெந்தகந் தலையோடு துருசு கறுத்த குங்கிலியம்
அல்லும் வகைக்குக் கழஞ் சரையாய் அடரும் நீலஞ்சமனாகக்
கல்லுங் கள்ளு விட்டரைத்துக் கடுகுக் குப்பிதனிலடைத்து
மெல்ல எரிநீர் ரணத்திலிட மெச்சுங் குளிர்ந்த நீலமிதே. 83

## இரணத்திற்குத் தைலம்

கொல்லுஞ் சூதங் கெந்தகமும் கூறுந்தாரந் துருசு துத்தம்
அல்லுங் குக்கில வினியுடன் அடங்காக் காசுக்கட்டி வெட்பாலை
சொல்லுஞ் சீமை வங்காளஞ் சுகமா மருதுவெள் வீரஞ்சுள்ளி
வெல்லும் வசம்பு மஞ்சளுடன் வேண்டும்வகைக்குக் கழஞ்சாமே.
84

(அ.பொ):- அவினி = அபினி; மருதுவெள் = மருந்து வெள்ளை;
சுள்ளி வசம்பு, சுள்ளி மஞ்சள் எனக்கூட்டிப் பொருள்
கொள்க; சுள்ளி = சிறுகுச்சி (போன்றது).

ஆமே எண்ணெய் படி ஆறு மடர்ந்த தேங்காய்பால் பொங்கு
சாமே ஓதியம்பால் படியும் தக்க வெரித்துத் தைலமிடின்
போமே புண்புரை மாறும் பொத்துப் புண்ணும் பௌத்திரமும்
தாமே ரணங்கள் தான் திர்க்கும் சதிர் வங்காளத் தைலமிதே.
85

### பச்சைத் தைலம்

**பச்சை வெட்டு மரமஞ்சள் பகரும் கடக சிங்கவுள்ளி**
**கெச்சக்காய் குன்றி யுள்ளிருக்கும் விதைதான் துத்தம் துருசுடனே**
**அச்சுச் சூதம் இருதாரம் அடர்ந்தே நீலம் அரிதாரம்**
**மெச்சும் வசம்பும் கடுக்காயும் விதமாய்க் கழஞ்சு தானொன்றே.**
**86**

(அ.பொ):- இருதாரம் = தேவதாரம்; சரள தேவதாரம்

**ஒன்றே எள்ளின் எண்ணெய்படி உகந்த முலைப்பால் குமரிச்சாறு**
**அன்றே எரித்து ரணத்திலிட அடங்கா எரிவும் புலிவைபொத்து**
**என்றே பனிச்சை பவுத்திரமும் விரண எருவாய் முளைதானும்**
**நன்றே ரணங்கள் திருமது நலமாய்ப் பச்சைத் தைலமிதே. 87**

(அ.பொ):- பனிச்சை = மகளிர் தலையலங்கார வகை ஐந்தனில் (ஐம்பால்) ஒன்று. அது கூந்தலைப் பின்னி முடிக்கும் கொண்டை எனப்படும். அதுபோலக் காணும் கட்டிக்கு அப்பெயர் இட்டார்போலும். இது தலையில் காணக்கூடிய கட்டியாகக் கருதவும் இடமுண்டு.

### இரணத்திற்குக் குமரித்தைலம்

**இடவே நொச்சி நுணாஅழிஞ்சி இலையும் முருங்கை அவுரிசங்கு**
**படவே கையான் துளசிபுங்கு வாகைத் தும்பை மேனியிலை**
**அடவாய் வகைக்குத் தான்பிடியாய் கருதுஞ் சூதக் கெந்தகமும்**
**கொடிவேலி வெள்வேல் வாலுழுவை கொடிய தாரம் துருசு**
**துத்தம். 88**

**துத்தம் வகைக்குக் கழஞ்சாகத் துவைத்த சாறு படிஎண்ணெய்**
**அத்தம் குமரிச் சாறுபடி அடங்கா தெரித்து ரணத்தில்இட**
**வத்தத் தினந்த ரணம்மூன்றினுக்கு வாகாய்த் தைலம் கழஞ்சு**
**மெத்த மேலும் தடவிவிடு மேவும் குமரித் தைலமிதே. 89**

(அ.பொ):- துவைத்த = இடித்த; அத்தம் = அர்த்தம் பாதி.

## இரணத்திற்குக் குடிநெய் தைலம்

முருக்கு எருக்கிலை முன்னையும் தும்பையும்
பருக்க நீலியும் மத்தியும் வேம்புடன்
பெருக்கும் செருப்படிப் பேயத்தி வேலியும்
கருத்தக் கொழிஞ்சியும் கையாந்த கரையே. 90

(அ.பொ):- முருக்கு = பலாசு; வேலி = கொடுவேலி; கொழிஞ்சி = கொள்ளுக்காய் வேளை.

வெளுத்த லெள்ளையும் வெண்ணாச்சி புங்குடன்
வளுத்தப் பூவும் வருந்து வகையொன்று
உளுத்த மாக உழக்குடன் நல்லெண்ணெய்
பழுத்த மாய்ப்படி பகர்துத்தம் காந்தமே. 91

காந்தம் சூதமும் காவி பறங்கியும்
வேய்ந்த வெப்பாலை ஊசியும் லிங்கமும்
சார்ந்த தாரமும் தருக்காரு போகமும்
சேர்ந்த எண்ணெயி லிட்டுநீ காய்ச்சிடே. 92

(அ.பொ):- பறங்கி = பறங்கிச் சக்கை; ஊசி = ஊசிப் பாலை; தாரம் = அரிதாரம்; தரு = தேவதாரு; காருபோகம் = கார்போகரிசி.

காய்ச்சு மெண்ணெய்தான் கருதிடும் நேரமும்
பூச்சு மூன்றுநாள் பொருந்தக் கொடுத்திடு
ஏச்சில்லை உப்பையும் புளியையும் மாற்றிடு
தாழ்ச்சி ஒன்றில்லை சர்வரணம் மாறுமே. 93

ரணமறும் புண்கள் மேல்நாட் டியேயிட
மணமது மாறி மழுங்க ரணமெல்லாம்
குணமது செய்யும் குறியைக் கேட்டிடே
பணமது போன்று பழஞ் சிரங் காவதோ. 94

(அ.பொ):- மழுங்க = அடியோடு அற்றிட; பணமதுபோன்று = சேமித்து வைத்த செல்வம் போல; பழஞ்சிரங்கு = நாட்பட்ட இரணம்.

**சிரங்கு அரையாப் புந்திரும் வெடிசூலை**
**பறங்கிக் கிரந்தியும் வாழையும் சூலையும்**
**குறங்குக் குறிச்சடை பொருந்தும் பறங்கியும்**
**சிரஞ்சதைச் சிங்கியும் திரும் பலரணம். 95**

(அ.பொ):- வாழை = தொடை வாழை என்னும் ஓர்வகைப் பெரிய கட்டி; குறங்குக் குறிச்சடை = குறங்குச் சடை குறிச்சடை என்று பொருத்தி) தொடைச் சடை, ஆண் குறி; பெண் குறிச் சடை என்னும் கழலைகள் எனப் பொருள் கொள்க; குறங்கு = தொடை.

### இரணங்களுக்கு நெய் (அகமருந்து)

**கொடிவேல் முருங்கைக் கொழுஞ்சியுடன் கோதாம் துத்திக் குக்கிலுடன்**
**அடவே பலமு மொன்றாகும் அழகாம் சூதம் கற்பூரம்**
**வடிவாய்ப் பலமுங் காலாக வாகாய் மருந்து வெள்ளையுமே**
**விடுவாய் பசுவின் நெய் ஒன்று வேத்தக் கையான் சாறொன்றே. 96**

(அ.பொ):- கையான் = மஞ்சள் கரிசலாங் கண்ணி.

**சாறே கற்கம் நெய்கூட்டிச் சதுர எரித்து நெய் நுகர**
**வேறே குட்டம் மேல் பறங்கி விடங்கள் கிரந்தி விடசூலை**
**ஆறாக் கிரந்தி அழிசிங்கி அரையாப் புடனே ரணமோடும்**
**பூறா நாள்கள் நாலாறு உப்புப் புளியும் பொருந்தாதே. 97**

## மேற்படி நெய் (வேறு)

வெள்ளைச் சாரணை விளாம்பிசினும் வேண்டும் குக்கில் குங்கிலியம்
தள்ளப்படாத மிருதாரம் சாரும் மருத்து வெள்ளையுடன்
உள்ளத் துறையும் செந்தூரம் ஓங்கும் காசு மெட்டாக
வள்ளப் பசுவின் நறுநெய்யும் வாரும் படியு மொன்றாமே. 98

(அ.பொ):- உள்ளத் துறையும் செந்தூரம் = மனோசிலை செந்தூரம்.

ஆமே முலைப்பால் ஆவின்பால் அருங்துங் கையாந்த கரையுடன்
ஓமே எரித்து உட்கொள்ளில் ஓடும் சிங்கி உளமாந்தை
பாமே சூலை பலபுத்து படருங் கிரந்தி பலாத்தோடை
ஈமே நாள்கள் எட்டருந்த இதமாம் ஆவின் பால்சேரே. 99

(அ.பொ):- பலாத்தோடை = பாலப் பழத்தின் முட்கள்போல் மேலே பரவலாகத் தோன்றும் தோல் நோய்.

## இரணங்களுக்கு மஞ்சட் காரப்பொடி

சங்கும் மஞ்சள் தலையோடுந் தயங்கும் தாரம் துத்தமுடன்
பொங்கும் கரிய குங்கிலியம் போர்த்த துணியும் சமனாக
மங்கா திடித்துப் பொடிசெய்து வழுத்த தோடை எரிசிங்கி
பொங்கும் பறங்கி யதுவெல்லாம் போகும் மஞ்சட் காரமிதே. 100

(அ.பொ):- வழுத்ததோடை = வழுவழுப்புடன் பரவலாகத் தோலில் தோன்றும் நோய்

## குளிர்ந்த நீர்

மஞ்சள் வசம்பு சுட்டகரி மதித்த சூதம் கெந்தகமும்
அஞ்சும் சீனம் நீலமுடன் அரிய கள்ளும்தான் வார்த்து
மிஞ்ச அரைத்துக் குப்பியிட்டு மிகவே எரிந்த ரணத்திலிடக்
கஞ்சம் மிகுந்த குறைமாறும் கருணைக் குளிர்ந்த கருநீரே. 101

(அ.பொ):- கஞ்சம் = நச்சு நீர்.

## சகல ரணத்திற்குச் சிங்கித் தைலம்

மிருதார் சிங்கி கெந்தகமும் மிகுந்த நீலம் சூதமுடன்
அறிவாய் சீனம் பறங்கியுடன் ஆனைக் கடுக்காய் துத்தமுடன்
பரிவாய் வசம்பு உள்ளியுடன் பகரும் புங்கின் வேரதின்பால்
தெரிவாய் ஒப்பும் தேங்காய்நெய் திறமாய்க் கடுகு பதமெரியே. 102

(அ.பொ):- பறங்கி = பறங்கிச் சக்கை; ஒப்பும் = சமனாக.

எரித்தே பதத்தி லெடுத்துவைத்து எரியும் சண்டி அரைப்பிளவை
உரியும் தாரை படுகிரந்தி படாகப் பறங்கி பலதோடை
எரியும் சூலை இருவெடியும் இயங்கும் பிளவை பவுத்திரமும்
வரிந்த சிங்கி பச்சையென்ற மதித்த தைலம் வகைதானே. 103

(அ.பொ):- உரி = தோல்; தாரை = நீர்த்தாரை போன்ற தசைக் குழாய்கள்; படு = உண்டாகிற; தோடை = கொளுஞ்சி நாரத்தன் காய்த்தோல்போலத் தடித்து மேடும் பள்ளமுமாகத் தோலில் காணப்படும் நோய்கள். இருவெடி = அகக்கட்டி, புறக்கட்டி என்ற இருவகைக் கட்டிகள்; வரிந்த = இறுகிய.

**அகத்தியர் இரண நூல் முற்றிற்று.**